பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

25 02 2025 **TUESDAY** 12 40 **PM**

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா நிலையான பொருளாதார வளர்ச்சியுடன் முன்னணி நாடாக உருவெடுத்து வருவதாக சர்வதேச பொருளாதார நிபுணர்கள் பாராட்டியிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

3. தில்லி சட்டப்பேரவையிலிருந்து ஆம் ஆத்மி சட்டப்பேரவை உறுப்பினர்கள் 12 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்

4. சென்னை, அம்பத்தூரில் 4 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டிலான சென்னை தகவல் தரவு மையத்தை தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

5. உகாண்டா சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Sachin - Angad** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>>><<<<<<<<<

இந்தியா நிலையான பொருளாதார வளர்ச்சியுடன் முன்னணி நாடாக உருவெடுத்து வருவதாக சர்வதேச பொருளாதார நிபுணர்கள் பாராட்டியிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை குவஹாத்தியில் இன்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், சர்வதேச அளவில் மந்தமான பொருளாதார சூழல் காணப்படும் நிலையிலும், நாட்டின் வளர்ச்சி சீராக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக உலக நாடுகள் உற்றுநோக்கும் வகையில் இந்தியாவின் செயல்பாடு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்மாநிலத்தில் உள்ள திறன்மிக்க தொழிலாளர்களின் உழைப்பு, அஸ்ஸாமை முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக மாற்றும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள இளைஞர்கள் அதிவேகமாக திறன்பயிற்சி பெற்று வருவதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

மத்திய அமைச்சர்கள் திரு. சர்பானந்த சோனோவால், திரு. ஜோதிராதித்ய சிந்தியா, இந்தியாவின் முன்னணி தொழில் நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகள் மற்றும் பல்வேறு நாடுகளின் தொழில்துறையினரும் இந்த இரண்டு நாள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

>>>>>>>><<<<<<<<<

ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

நாடாளுமன்ற வளாகத்தில் பிஜேபி உறுப்பினர் திரு. சஞ்சய் ஜெய்ஸ்வால் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், குழுவின் உறுப்பினர்களான திருமதி. பன்சூரி ஸ்வராஜ், காங்கிரஸ் கட்சியின் திருமதி. பிரியங்கா காந்தி, திரு. மனீஷ் திவாரி, லோக் ஜனசக்தியின் திருமதி. சாம்பவி சௌத்ரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. யு.யு. லலித், தேசிய சட்ட ஆணையத் தலைவர் நீதிபதி திரு. ரித்துராஜ் அவஸ்தி ஆகியோர் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை கூட்டுக் குழுவினரிடம் தெரிவித்தனர்.

>>>>>>>><<<<<<<<<

தில்லி சட்டப்பேரவையிலிருந்து ஆம் ஆத்மி சட்டப்பேரவை உறுப்பினர்கள் 12 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தில்லி சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தில் துணை நிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா இன்று உரையாற்றினார்.

அவரது உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அமளியில் ஈடுபட்டதை அடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் திருமதி. அதிஷி உள்ளிட்ட 12 ஆம்ஆத்மி கட்சி உறுப்பினர்களை சஸ்பெண்ட் செய்து பேரவைத் தலைவர் திரு. விஜேந்தர் குப்தா உத்தரவிட்டார்.

இதையடுத்து, சஸ்பெண்ட் செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் மீதான நடவடிக்கையை திரும்பப்பெற வலியுறுத்தி, திருமதி. அதிஷி தலைமையில் அவைக்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே, முந்தைய ஆம் ஆத்மி அரசின் செயல்பாடு குறித்த தணிக்கை அறிக்கையை, முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா தில்லி சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.

>>>>>>>>><<<<<<<<<

ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, பாரிஸில் பிரான்ஸ் நாட்டின் ராணுவத் தளபதியை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

உலக அமைதி மற்றும் பாதுகாப்புக்கான பரஸ்பர உத்தரவாதங்களை நிறைவேற்றுவது குறித்தும் இந்த பேச்சுவார்த்தையின் போது விவாதிக்கப்பட்டது.

முன்னதாக, ஜெனரல் உபேந்திர துவிவேதி, பிரான்ஸ் ராணுவத்தின் அணிவகுப்பு மரியாதையையும் ஏற்றுக் கொண்டார்.

>>>>>>>>><<<<<<<<<

பீகாரில் தேசிய ஜனநாயக கூட்டணியின் செயல்பாடு குறித்து பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி.நட்டாவை சந்தித்து அம்மாநில முதலமைச்சரும், ஐக்கிய ஜனதா தள தலைவருமான திரு. நிதிஷ் குமார் ஆலோசனை நடத்தியுள்ளார்.

பீகார் சட்டப்பேரவையின் பதவிக்காலம் இந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில், தற்போதைய மாநில அரசில் இடம்பெற்றுள்ள தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகள், வரும் தேர்தலை ஒன்றிணைந்து எதிர்கொள்வதற்கான உத்திகள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

>>>>>>>>><<<<<<<<<

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . .

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இன்றும் லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

கும்பமேளா ஆன்மிக திருவிழாவாக மட்டுமின்றி, நாட்டின் கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற கருத்தை வலுப்படுத்தும் வகையில் உள்ளதாகவும் உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாநில அரசு மேற்கொண்டதாகவும் அவர் தமது சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>>>><<<<<<<<<

இதனிடையே, மகா கும்பமேளாவின் நிறைவு நாளான நாளை, அதிக அளவில் பக்தர்கள் வரக்கூடும் என்பதால், பிரயாக்ராஜ் ரயில் நிலையத்தில் தங்குமிடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

>>>>>>>>><<<<<<<<<

சென்னை, அம்பத்தூரில் 4 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள **ctrlS** குழுமத்தின் சென்னை தகவல் தரவு மையத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

சென்னை, கிண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக அவர் இந்த மையத்தை திறந்து வைத்தார்.

சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி தொடங்கப்படும் இந்த மையத்தில், சுமார் 500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

மேலும், சென்னை கோபாலபுரத்தில் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் 8 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள குத்துச்சண்டை அகாடமியையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

>>>>>>>>><<<<<<<<<

உடல் பருமன் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை முன்னெடுக்க தமக்கு வாய்ப்பளித்தமைக்கு ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திர மோடி ஏற்படுத்தியுள்ள 10 பேர் கொண்ட குழுவில் தாம் இடம் பெற்றிருப்பது குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்த இயக்கத்தில் இணைந்து விழிப்புணர்வை ஏற்படுத்த நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. சுப்ரியா சுலே, விளையாட்டுத் துறையைச் சேர்ந்த சானியா மிர்ஸா, இர்ஃபான் பதான், ஷீத்தல், திரையுலகைச் சேர்ந்த தீபிகா படுகோன், உள்ளிட்ட 10 பேரை தாம் பரிந்துரைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>>>><<<<<<<<<

மும்பை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

மும்பை, தானே, நவி மும்பை மற்றும் பால்கர் மாவட்டங்களில் இயல்பை விட ஆறு முதல் ஏழு டிகிரி செல்சியஸ் வெப்பம் நிலவும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் பிப்ரவரி மாதத்தில் அதிகபட்சமாக 38 புள்ளி ஐந்து டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெப்பம் பதிவாகி உள்ள நிலையில், இந்த ஆண்டு மேலும் அதிகரிக்கக்கூடும் என்பதால், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அந்த மையம் அறிவுறுத்தியுள்ளது.

>>>>>>>>><<<<<<<<<

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி. **Ursna Von Der Leyen** இரண்டு நாள் பயணமாக நாளை மறுநாள் இந்தியா வருகிறார்.

அவரது இந்தப் பயணம், இந்தியாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையிலான உறவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று அந்த நாடுகளின் தூதர் திரு. **Herve Delphin** கூறியுள்ளார்.

இந்தப் பயணம் இந்தியாவுடனான உறவில் ஐரோப்பிய நாடுகளின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஐரோப்பிய யூனியன் - இந்தியா உச்சிமாநாடு குறித்தும் புதிய ஒத்துழைப்புக்கான செயல்திட்டம் குறித்தும் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர், இந்திய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக திரு. **Herve Delphin** கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உகாண்டா சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Sachin - Angad** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-10, 21-4 என்ற செட் கணக்கில் உகாண்டாவின் **Joseph – Arafat** இணையை வென்றது.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் கோகுல் - விஷாங்க் இணை, உகாண்டாவின் புருனோ – நஜிபு இணையை வென்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>>><<<<<<<<<

புரோ ஹாக்கி லீக் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது ஆட்டம் இன்று மாலை நடைபெறவுள்ளது.

மகளிர் பிரிவில் இந்தியா - நெதர்லாந்து இடையேயான இரண்டாவது ஆட்டம் இரவு மணி 7.30-க்கு நடைபெறுகிறது.

>>>>>>>><<<<<<<<<